திருச்சியில் மேற்கு தொகுதிக்குட்பட்ட எடமலைப்பட்டி புதூரில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் கீழ் உறுப்பினர் சேர்க்கை முகாமை தொடங்கி வைத்தார் நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகராட்சி மேயர் அன்பழகன்,மேற்கு தொகுதி பொறுப்பாளர் கேசவன் மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், சேர்மன் துரைராஜ் கிராப்பட்டி செல்வம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கோவை தெற்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 6th SFC 2025 2026 கீழ் 1 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் 11 இடங்களில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணியினை கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா துவக்கி வைத்தார். இதில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.இரவி, கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அருண்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம், நகர்மன்றத் தலைவர் மெஹறிபா பர்வீன், துணைத் தலைவர் அருள்வடிவு, ஒன்றிய கழக செயலாளர் எஸ்எம்டி. கல்யாணசுந்தரம், நகர செயலாளர் முனுசாமி உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி விரகானூரில், கழக துணைப் பொதுச்செயலாளர் தி.மு.க நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி அவர்களும், வி.சி.க தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி அவர்களும் பழங்குடியின மக்களுக்காக போராடிய அருட்தந்தை. ஸ்டேன் சாமி அவர்களின் சிலையை திறந்து வைத்தார்கள். இதையொட்டி தமிழக ஆயர்களின் கூட்டுத் தலைமை ஏற்பாட்டில் நடைபெற்ற சனநாயக எழுச்சி மாநாட்டை திருச்சி (தெ) மாவட்ட தி.மு.க செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் உரையாற்றி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் முத்தரசன், காங்கிரஸ் மூத்த தலைவர் திருச்சி வேலுச்சாமி, திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர் சவுந்தரரபாண்டியன், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ, பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தஞ்சாவூர் மாநகராட்சி பள்ளி அக்ரஹாரம் ஸ்ரீ ஹரி நகரில் நகர்புற நலவாழ்வு மையத்தை திறந்து வைத்ததை தொடர்ந்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலையில் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி, மாநகராட்சி ஆணையர் கண்ணன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா.கலைவாணி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்

கிருஷ்ண லீலா புதல்வி ஜிந்தகி-அ.ஆல்ட்ரின் ஞானராஜ் திருமணம்!

ராஜா ஈஸ்வரன் - ராணி ஸ்ரீ குமார்- ஹெலன் டேவிட்சன் -ச.தங்கவேலு சதன் திருமலைக்குமார்-எஸ்.தங்கப்பாண்டியன்-வி.பி.ராஜன் வாழ்த்துரை!

தென்காசி, ஜூலை 7- தென்காசி வடக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர், சிவகிரி பேரூராட்சி உறுப்பினர் கிருஷ்ண லீலா எம். சீமான் கௌதம் ஆகியோரது மகள் எஸ்.ஜிந்தகி , திருச்சி மாவட்டம் முள்ளிப் பட்டி இறைவன் நகர் காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் ஞா. அந்தோணி செல்வம்- அ.மரிய செல்வி, அ.ராதா ஆகியோரது மகன் அ.ஆல்ட்ரின் ஞானராஜ் ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இன்று (7.7.2025-திங்கள் கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் சிவகிரி சி.எஸ்.ஐ தூய லூக்கா ஆலயத்தில் சிவகிரி சேகரத் தலைவர்,

சி.செல்வின் டேனியல் ராஜ், கூடன்குளம் சேகரத் தலைவர் எம்.பொன் ராபின் வினோ ஆகியோர தலைமையில் நடைபெறுகிறது, அதன் பின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிவகிரி தேவர் மகா சபை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ். டி.சீனிவாசன் தலைமை வகிக்கிறார். வாசுதேவ நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் பொன்.முத்தையா பாண்டியன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.சு.செண்பக விநாயகம்,

வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கோ.பூசைப்பாண்டியன், தென்காசி வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் வே.மனோகரன், இராய கிரி பேரூர் கழக செயலாளர் கே.டி.சி ச. குருசாமி, சிவகிரி பேரூராட்சி தலைவர் எஸ்.கோமதி சங்கரி சுந்தரி வடிவேல், வாசுதேவநல்லூர் பேரூர் கழக செயலாளர் ரூபி ஆ.பாலசுப்பிர மணியன், சிவகிரி பேரூர் கழக செயலாளர் வி.எஸ்.ஜி.சேது சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர். மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர். கார்த்திக் வரவேற்புரையாற்றுகிறார் மாவட்ட பிரதிநிதி டாக்டர் ஜி.எஸ்.எஸ்.நல்லசிவன் தொகுப்புரை வழங்குகிறார்.

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா ஈஸ்வரன் எம்.எல்.ஏ, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் தி.சதன் திருமலைக்குமார் , எஸ். தங்கப்பாண்டியன், முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் வி.பி. ராஜன மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.முத்துச் செல்வி, முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவபத்மநாதன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆ.துரை, தனுஷ் எம்.குமார், எஸ்.பரமகுரு, எம்.பி.கே.மருதப்பன், இராம.வைரமுத்து, இரா.அருள்ஜோதி பாபா, மாவட்ட கழக நிர்வாகிகள் கோ.சுப்பையா, ஜோ.இராஜதுரை, சு.புனிதா, இல.சரவணன், வி.சந்திர லீலா, எம்.பூங்குடி, பொதுக்குழு உறுப்பினர்கள் க.வேல்ச்சாமி பாண்டியன், எஸ். எம்.சாகுல் ஹமீது, டி. வெள்ளத்துரை, பா.மாரிச்சாமி, பி.மாரி ச்சாமி, ஆர். தேவதாஸ், மு.பராசக்தி, த.மகேஷ்வரி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள் மணமக்களை வாழ்த்துகின்றனர் முடிவில் சிவகிரி 17வது வார்டு கழக செயலாளர் எம்.ரூபன் குமார் நன்றி கூறுகிறார்.

நாகை மாவட்டம் நாகை தளபதி அறிவாலயத்தில் ஓரணியில் தமிழ்நாடு நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.உடன் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தொகுதி பார்வையாளர்கள் இரா .சங்கர் ஆர். அருள் செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த. விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச.மாநில நிர்வாகிகள் கூட்டம் மாநிலத் தலைவர் து.பிச்சை தலைமையில் திருச்சியில் பொருளாளர் இரா. பழனியப்பன்,துணைத் தலைவர் மரு. இரா.ராஜன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் தொ.மு.ச. பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் தீர்மானங்களை விளக்கி பேசினார். இதில் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில்

முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சி!

மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை.7- பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவர்களாக பணிபுரியவுள்ள பட்டமேற்படிப்பு முடித்த முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியினை 04.07.2025 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள், 200 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 16 நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகள், 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றின் மூலமாக பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககத்தின் மூலமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் இயங்கும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புர நல வாழ்வு மையங்கள் மற்றும் நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு கூடுதலான சேவைகள் வழங்க தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களை பணியமர்த்தி செயல்பட்டு வருகிறது.

கே.ஹெச்.குழுமத் தலைவர் - ஹாஜி மலாக் முகமது ஹாஷிம் சாஹிப் மறைவு!

இராணிப்பேட்டை பகுதியில் - தோல் பதனிடும் தொழில் துறையின் பிதாமகராக விளங்கியவர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 6 -

கே.ஹெச். குழுமத் தலைவரும் தென்னிந்திய தோல் பதனிடுவோர் மற்றும் முகவர்கள் பேரவையின் புரவலருமான ஜனாப் ஹாஜி மலாக் முகமது ஹாஷிம் சாஹிப் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட் டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கே.ஹெச். குழுமத் தலைவரும் தென்னிந்திய தோல் பதனிடுவோர் மற்றும் முகவர்கள் பேரவையின் புரவலருமான ஜனாப் ஹாஜி மலாக் முகமது ஹாஷிம் சாஹிப் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்த முற்றேன்.

இராணிப்பேட்டை பகுதியில் தோல் பதனிடும் தொழில்துறையின் பிதாமக ராக விளங்கி, பல பேருக்கு வேலை வாய்ப்பளித்து, இஸ்லாமிய மக்களி டையே பெரும் மரியாதை பெற்றுத் திகழ்ந்தவர் முகமது ஹாஷிம் சாகிபு அவர்கள்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் மேல்விஷாரம் பகுதி மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டைமாவட்டம்/மாநகராட்சி, திருமலைராயசமுத்திரத்தில், கால்நடைபராமரிப்புத்துறைசார்பில், சிறப்புகால்நடைசுகாதாரமற்றும்விழிப்புணர்வுமுகாம்மற்றும்தேசியகால்நடைநோய்தடுப்புதிட்டத்தின்கீழ், 7வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி திட்ட முகாமினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, துவக்கி வைத்து, சிறந்த கிடேரி கன்று விவசாயி விருதுகளை விவசாயிகளுக்கு வழங்கினார். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.எஸ்.கே.சீனிவேலன், பொதுமேலாளர் (ஆவின்) மரு.அ.விருச்சப்பதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி புதுக்கோட்டை மாநகரத்தில் உள்ள 6வது வட்ட கழகத்தில் பாகம் எண்: 52 ல் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கார்த்திக்கேயன் தலைமையில் மாநகர திமுக பொறுப்பாளர் வே.ராஜேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முரளிதரன் , மாநகர கழக துணை செயலாளர் ரெங்கராஜன், வட்ட கழக செயலாளர்கள் கண்மணி சுப்பு, சி.மதியழகன் , கோவில்பட்டி நாகராஜன் , VATC இராஜேந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் கார் கணேசன், ராகவன் ஆதிமூலம், 6வது வட்ட கழக நிர்வாகிகள் கேசவன் , லோகநாதன், மீனாள் , அருண்குமார் , சி.தினேஷ் , தினேஷ்குமார் , ஜலாலுதீன், சபரிநாத் , பாண்டித்துரை , முகமது கனி மற்றும் BLA2 நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.